**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 268 of 2018**

**Deposition of Witness P. W.4**

| | |
|---|---|
| **Name : சுப்பிரமணி** | **Father/Husband's Name: சாமிநாதன்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 06.05.2024**

**A1, A2 present.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது கரட்டுபட்டி எவிசன் நகரில் குடியிருந்து, தேங்காய் வெட்டும் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 சகாயராஜ் அவரது மனைவி பாக்கியலட்சுமி மற்றும் அவரது தாயார் அ.சா.3 சின்னத்தாய் மேரி ஆகியோரை எனக்கு தெரியும். அவர்கள் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள் ஆவார்கள். கடந்த 10.07.2017ம் தேதி மதியம் 2.30 மணிக்கு அ.சா.1 சகாயராஜ் அவர்களது வீட்டிலிருந்து சத்தம் கேட்டது. நான் போய் பார்த்த போது ஆஜர்எதிரிகள் இருவரும் கோழி மற்றும் சேவலை கையில் பிடித்து வைத்திருந்தார்கள். அவர்கள் கோழி மற்றும் சேவலை திருடியது குறித்து நான் போலிசுக்கு போன் மூலமாக தகவல் சொன்னேன். போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து எதிரிகளை கூட்டி சென்று விட்டார்கள். நான் , சகாயராஜ், பொன்னுச்சாமி, வடிவேல் , ராமராஜ் ஆகியோர் காவல் நிலையம் சென்று கோழி மற்றும் சேவலை ஒப்படைத்தோம். அப்போது புகாரில் நான் சாட்சியாக கையொப்பம் இட்டேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். புகார் ஏற்கனவே அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2. நான் கையொப்பம் போட்ட தாளில் என்ன எழுதப்பட்டிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் நான் படித்து பார்க்கவில்லை. நான் போலிசார்

கேட்டுக்கொண்டதால் கையொப்பம் போட்டேனா என்றால் எதிரிகள் மற்றும் அவர்களிடமிருந்த கோழி மற்றம் சேவலை ஒப்படைத்தற்காக சாட்சியாக கையொப்பம் இட சொன்னார்கள் நான் கையொப்பம் இட்டேன். நான் கையொப்பம் போட்ட தாளில் உள்ள விபரங்களை யார் எழுதினார்கள் என்றால் போலிசார் தான் எழுதினார்கள். எனது வீட்டிற்கும் சகாயராஜ் வீட்டிற்கும்இடையே சுமார் 50 அடி தூரம் இருக்கும். போலிசார் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். வழக்குச்சம்பவத்தின் போது சத்தம் கேட்டு சம்பவ இடம் சென்ற போது அ.சா.1 ன் மனைவி பாக்கியலட்சுமி சொல்லிதான் வழக்கு சம்பவம் தெரியும் என்றும், நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். அ.சா.1 சகாயராஜ் எனது நண்பர் என்றால் சரிதான்.

3. சம்பவ நடந்ததாக சொல்லபடும் சுமார் 20 நிமிடம் கழித்து போலிசார் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார். நான் சம்பவ இடம் சென்று பார்த்த போது யார் கையில் எத்தனை கோழி இருந்தது என்று கேட்டால் பன்னீர் கையில் கோழியும், பிரபு கையில் சேவலும் இருந்தது. வழக்கு சம்பவத்திற்கு முன்பு எதிரிகளை தெரியுமா என்றால் தெரியாது. எதிரிகளின் பெயர்களை யார் சொல்லி நான் தெரிந்து கொண்டேன் என்றால் நான் அவர்களிடம் நேரடியாக கேட்டு தெரிந்து கொண்டேன். போலிஸ் விசாரணையின் போது எதிரிகள் கோழிகளை திருட முயற்சித்ததாகவும் , அ.சா.1 ன் மனைவி சத்தம் போட்ட போது நான் அங்கு சென்று பார்த்ததாகவும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு வழக்கு சம்பவத்தை பற்றி நேரடியாக தெரியாது என்றும் அ.சா.1 மனைவி சொன்னதன் அடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

K R KALAIVANAN
Digitally signed by K R KALAIVANAN
Date: 2024.05.17 11:03:53 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி